
## ஒரு ஏக்கர் 100 நாள் ரூ. 2,00,000 நல்வருமானம் தரும் நன்னீர் இறால

## 25.09.2013



குட்டையில் தாராளமாக ஆக்ஸிஜன் கிடைக்க கருவிகள்... வலை பாதுகாப்பு

கடற்கரையோரங்கள், கடலும் ஆறும் சந்திக்கும் முகத்துவாரங்கள் ஆகிய பகுதிகளில் மட்டுமே இருந்த இறால் வளர்ப்பு, தற்போது உள்நாட்டுப் பகுதிகளிலும் பரவலாகி வருகிறது. வெளிநாட்டு விற்பனை வாய்ப்பும் அதிகம் என்பதால், நன்னீர் இறால் வளர்ப்பு மூலம் நல்ல லாபம் கிடைக்கவே... பலரும் இதில் ஈடுபட்டு வருகிறார்கள். இவர்களில், கொஞ்சம் வித்தியாசமாக... குட்டையில் மீன்களோடு சேர்த்து இறாலை வளர்த்து, கூடுதல் லாபம் ஈட்டி வருகிறார், தஞ்சாவூரைச் சேர்ந்த சீனிவாசன்.

**தாராளமாக குஞ்சுகள் கிடைக்கும்!**

தஞ்சாவூர் – பூதலூர் சாலையில் பதினைந்தாவது கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பிள்ளையார்நத்தம் கிராமத்தில் அமைந்திருக்கும் சீனிவாசன் இறால் பண்ணை உள்ளது. எனக்கு சொந்த ஊர், நாகப்பட்டினம் மாவட்டம், கடம்பங்குடி அங்கு, 30 ஏக்கரில் நெல், கரும்பு சாகுபடி செய்து கொண்டிருந்தேன். தொடர்ச்சியாக நஷ்டம். அதனால், நிலத்தை குத்தகைக்கு விட்டுவிட்டு, குடும்பத்துடன் தஞ்சாவூருக்கு வந்து, இயற்கை விளைபொருள்களை வாங்கி விற்பனை செய்து கொண்டிருக்கிறேன் என்றார். எங்கள் ஊரில் 2003ம் வருடம் வரைக்கும் நன்னீர் இறால் வளர்த்தேன். அத நல்ல லாபமான தொழிலாக இருந்தாலும் அந்த சமயத்தில், இறால் குஞ்சுகைள உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் அதிகமாக இல்லை. அதனால், குஞ்சுகளுக்குத் தட்டுப்பாடு வரவே.. இறால் வளர்ப்பைக் கைவிட்டேன். இப்போது, சென்னை, கிழக்கு கடற்கரை சாலையில் இறால் குஞ்சு பொரிக்கும் நிறுவனங்கள் நிறைய இருக்கிறது. அதனால் குஞ்சுகள் தாராளமாக கிடைக்கிறது. இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டதுமே.. மீன்

குட்டைகளை குத்தகைக்கு எடுத்து, கடந்த ஒரு வருடமாக இறால் வளர்த்துக் கொண்டிருக்கிறேன்.
இறால் விற்பனைக்காக பெரிதாக கவலைப்படத் தேவையில்லை. நாகப்பட்டினம், சென்னையில் இருக்கும் கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு வாரியத்தில் சொல்லி வைத்தோம் என்றால் ஏற்றுமதி செய்பவர்கள் தேடி வந்து வாங்கிக்கொள்வார்கள். உள்ளூர் மார்க்கெட்டிலும் நல்ல விற்பனை இருக்கிறது என்றார்.

**100 நாட்களில் வருமானம்!**

நெல், கரும்பு சாகுபடிக்குத் தேவையான தண்ணீரைவிட, இறால் வளர்ப்பிற்கு குறைவான தண்ணீர்தான் தேவைப்படும். இதில் நூறு நாளில் லாபம் பார்த்துவிடலாம். ஒரு ஏக்கருக்கு வருடத்திற்கு 25 ஆயிரம் ரூபாய் என்று குத்தகைக்கு எடுத்திருக்கிறேன். இந்தப் பண்ணை மொத்தம் 10 ஏக்கர் இதில் 7 ஏக்கர் நீர்ப்பரப்பு. அதில், 13 குட்டைகள் இருக்கிறது. இங்கே, நன்னீர், கடல்நீர் இரண்டிலும் வளரக்கூடிய 'லீட்டேபினஸ் வெனாமி' என்கிற ரக இறாலைத்தான் வளர்க்கிறேன் என்றார் சீனிவாசன்.

**சூரிய வெளிச்சம் அவசியம்!**

களிமண் தன்மை கொண்ட நிலத்தில்தான் குட்டை அமைக்க வேண்டும். காரணம் இந்த நிலத்தில்தான் தண்ணீர் தேங்கி நிற்கும். ஒரு வேளை இந்த நிலத்தின் தன்மை பற்றி தெரியவில்லை என்றால், குட்டை அமைக்க திட்டமிட்டுள்ள நிலத்தில் ஒரு எளிய பரிசோதனையை நீங்களே செய்யலாம். அதாவது, 1 மீட்டர் நீளம், அகலம் ஆழத்தில் குழி எடுக்கவும். அதில் நீரை நிரப்பவும். உடனே நீர் வற்றிவிட்டால், அந்த நிலம், குளம் அமைக்க ஏற்றது அல்ல என்று புரிந்து கொள்ளலாம். தண்ணீர் தேங்கி நின்றால், தயங்காமல் குட்டை அமைக்கலாம். சூரிய வெளிச்சம் தாராளமாகக் கிடைக்கக் கூடிய பகுதியில் இறால் குட்டை அமைக்க வேண்டும். அப்போதுதான் ஒளிச்சேர்க்கை சிறப்பாக நடைபெற்று, இறாலுக்குத் தேவையான இயற்கையான உணவு தடையின்றி உற்பத்தியாகும். நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதாக இருந்தால், கார – அமிலத்தன்மையின் அலகு 7 பி.ஹெச். முதல் 8.5 பி.ஹெச். அளவுக்குள் இருக்க வேண்டும். இதை அறிந்து கொள்ள நீர்ப் பரிசோதனை செய்வது கட்டாயம். ஆற்று நீராக இருந்தால் கார – அமிலத்தன்மையைப் பரிசோதிக்க வேண்டியதில்லை. நான்கு வேளைகளில் தீவனம்!குட்டையில் இரண்டு சால் உழவு ஓட்டிப் 15 நாட்கள் வெயிலில் காயவிட வேண்டும். பிறகு, ஏக்கருக்கு 100 கிலோ கல் சுண்ணாம்பு, 100 கிலோ ஜிப்சம் என்கிற அளவில் போட்டு, ஒன்றரையடி உயரத்திற்கு தண்ணீர் நிறுத்தி.. அதில், 50 கிலோ ஈரச் சாணம் 5 கிலோ தாது உப்புக் கலவை (இது கால்நடை பல்கலைக்கழகப்

பயிற்சி மையங்களிலும் கால்நடை மருந்துக் கடையிலும் கிடைக்கும்). ஆகியவற்றைக் கலந்துவிட வேண்டும். அடுத்த மூன்று நாட்களில் பாசி உட்பட தாவர, விலங்கின மிதவை நுண்ணுயிரிகள் உருவாகும். பிறகு, 4 அடி உயரத்திற்கு தண்ணீரை நிறுத்தி, 10 நாட்கள் முதல் 15 நாட்கள் வயதுள்ள ஒரு லட்சம் இறால் குஞ்சுகளை விட்டு, கடைகளில் விற்பனை செய்யப்படும் 2 கிலோ இறால் தீவனத்தையும் போட வேண்டும். இது குஞ்சுகளுக்கு ஒரு நாளுக்கான தீவனம்.
தீவனத்தை மொத்தமாகப் போடாமல், காலை 6 மணி, 10 மணி, மதியம் 2 மணி, மாலை 6 மணி என்ற நான்கு மணி நேர இடைவெளியில், நான்கு பாகங்களாகப் பிரித்து போட வேண்டும். குஞ்சுகள் வளர்ந்தாலும், இதே முறையில்தான் தீவனம் போட வேண்டும். கரையில் இருந்து கொண்டு தீவனத்தைப் போடாமல், மிதக்கக் கூடிய பலகையில் அமர்ந்து கொண்டு குட்டைக்குள் சென்று தீவனம் போட வேண்டும். அதற்கு வசதியாக குட்டையின் நான்கு மூலைகளிலும் கயிறு கட்டி வைத்துக் கொள்ளலாம். இரவு நேரங்களில் குட்டைக்குள் தாராளமாக ஆக்ஸிஜன் கிடைக்குமாறு அதற்கான பிரத்யேக கருவிகளைப் பொருத்த வேண்டும். பாம்பு, ஆமை, நண்டு போன்றவற்றைத் தவிர்க்க, குட்டையைச் சுற்றி வலை அமைக்க வேண்டும்.

**தீவனம்… கவனம்!**

குஞ்சுகள் விட்ட 2-ம் நாள் 2.2 கிலோ , 3ம் நாள் 2.4 கிலோ என தினமும் 200 கிராம் தீவனத்தை அதிகரித்துக் கொண்டே வர வேண்டும். 8-ம் நாளிலிருந்து 15-ம் நாள் வரை தினமும் 300 கிராம் தீவனத்தை அதிகரிக்க வேண்டும் 16ம் நாளிலிருந்து 22-ம் நாள் வரை தினமும் 400 கிராம் தீவனத்தையும் 23-ம் நாளிலிருந்து 30-ம் நாள் வரை தினமும் 500 கிராம் தீவனத்தையும் அதிகரிக்க வேண்டும். இறால் வளர்ச்சியை வைத்தே தீவனம் கொடுக்க வேண்டும்.
31-ம் நாள், குளத்தில் உள்ள இறாலைப் பிடித்து எடைபோட வேண்டும். பொதுவாக, அந்த வயதில் ஒரு இறால் குஞ்சு சராசரியாக 3 கிராம் எடையில் இருக்கும். ஒரு லட்சம் குஞ்சுகளில் 80- ஆயிரம் குஞ்சுகள் அளவிற்கு உயிரோடு இருக்கும். இவற்றின் மொத்த எடை 240 கிலோ இருக்கும். இதில் 7 சதவிகித அளவுக்குத் தீவனம் போட வேண்டும். இந்த வகையில், தினமும் 16.8 கிலோ தீவனம் போட வேண்டும்.
38-ம் நாள் ஒரு இறாலின் சராசரி எடை 4 கிராம் இருக்கும். மொத்த இறாலின் எடை 320 கிலோ. தினமும் இதில் 6 சதவிகிதம் அளவுக்கு தீவனம் போட வேண்டும். அடுத்தடுத்த வாரங்களில்.. 5%, 4%, 3%,2% என தீவனத்தைக் குறைத்துக் கொண்டே வர வேண்டும். எடையில் 2 சதவிகிதம் தீவனத்தை கடைசி வரை கடைபிடிக்க வேண்டும். எடை பார்க்க அனைத்து இறால்களையும் பிடிக்க வேண்டியதில்லை. குட்டையில் நான்கு பக்கமும் தலா

ஒரு முறை வலையை வீசி, அதில் கிடைக்கும் இறால்களின் எடையைக் கொண்டு, ஒட்டுமொத்த இறால்களின் சராசரி எடையை எளிதாகக் கணித்துவிடலாம். ஒரு கிலோ இறால் உற்பத்தி செய்ய சுமார் ஒன்றே கால் கிலோ தீவனம் தேவைப்படும்.

**ஒரு ஏக்கரில் 1,650 கிலோ இறால்!**

60-ம் நாளிலிருந்து 80-ம் நாளுக்குள் 400 கிலோ அளவுக்கு இறாலைப் பிடித்து விற்பனை செய்யலாம். இந்த சமயத்தில் ஒரு இறால், 10 கிராம் முதல் 20 கிராம் வரை எடை இருக்கும். 90-ம் நாளிலிருந்து 100 நாட்களுக்குள் 1,250 கிலோ அளவுக்கு இறால் படித்து விற்பனை செய்யலாம். இந்த சமயத்தில் ஒரு இறால், 25 கிராம் அளவில் இருக்கும். ஒரு ஏக்கர் குளத்தில் சராசரியாக 1,650 கிலோ அளவுக்கு இறால் கிடைக்கும். அறுவடை முடிந்த பிறகு, குட்டையை காயவிட்டு மீண்டும் நீர் நிரப்பி இறால் வளர்க்கலாம். முதல் தவணையில் பிடிக்கும் இறால், கிலோ சராசரியாக 250 ரூபாய் அளவுக்கு விற்பனையாகும்.

தஞ்சாவூரில் நாங்களே, நேரடியாக விற்பனை செய்திடுவோம். உயிரோடு இறால் கிடைப்பதால் உடனடியாக விற்றுவிடுகிறது. இரண்டாம் தவணை பிடிக்கும் இறாலை கிலோ 300 ரூபாய் என்று வியாபாரிகளுக்கு விற்றுவிடுவோம். இது மூலமாக, மொத்தம் ஏக்கருக்கு நாலே முக்கால் லட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கும். இதில், எல்லா செலவும் போக, 2 லட்சம் ரூபாய் வரை லாபம் கிடைக்கும். இதுபோல், ஒரு ஏக்கர் குட்டையில் , வருடத்திற்கு இருண்டு முறை இறால் வளர்த்து, 4 லட்சம் ரூபாய் அளவுக்கு லாபம் பார்க்கலாம் என்றார்.

| **ஒரு ஏக்கர் குட்டையில், ஒரு பருவத்தில் இறால் வளர்க்க, சீனிவாசன் சொல்லும் செலவு – வரவுக் கணக்கு (ரூபாய் மதிப்பில்)** | | |
|---|---|---|
| **விவரம்** | **செலவு** | **வரவு** |
| நிரந்தரச் செலவுகள் : | | |
| குட்டை | 50,000 | |
| காற்றுக் கருவிகள் | 42,000 | |
| வலை | 4,000 | |
| மொத்தம் | 96,000 | |
| நடைமுறைச் செவுகள் | | |
| சாணம், நுண்ணூட்டச் சத்து | 2,500 | |

| | | |
|---|---|---|
| டீசல் மோட்டார் நீர் ஏற்ற | 8,000 | |
| இறால் குஞ்சுகள் | 35,000 | |
| போக்குவரத்து | 10,000 | |
| காற்றுக் கருவி இயக்க டீசல் | 24,000 | |
| தீவனம் | 1,27,687 | |
| பராமரிப்பு | 21,000 | |
| அறுவடை | 9,000 | |
| விற்பனை மூலம் வரவு | | 4,75,000 |
| மொத்தம் | 2,31,187 | 4,75,000 |
| நிகர லாபம் | | 2,43,813 |

**தொடர்புக்கு**

கடல் பொருள் ஏற்றுமதி வாரியம்

சென்னை. தொலைபேசி : 044-26269192

சீனிவாசன், தொலைபேசி : 9043411312

***ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 25.09.13 www.vikatan.com***